www.padippakam.com

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

## PEOPLE'S LIBERATION ORGANIZATION OF THAMILEELAM

# 'ஆயுதங்களைகீழே போட்டதும் எமது புரட்சி முடிவடையும்'

## – உமா மகேஸ்வரன் –

மதுரை.

"தமிழ் ஈழ விடுதலைக்காக ஆறு முக்கிய இயக்கங்கள் போராடி வருகின்றன. டெலா இயக்கமும் நாங்களும் இணைந்து செயல்படுகிறோம். மற்ற இயக்கங்களுடன் உடன்பாடு செய்ய பேச்சு வார்த்தை நடத்துகிறோம். உடன்பாடு ஏற்படும் சாத்தியக் கூறுகள் உள்ளன" என்று தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தின் செயலாளரான உமா மகேஸ்வரன் தெரிவித்தார்.

இங்கு நிருபர்களைச் சந்தித்த அவர் தொடர்ந்து கூறியதாவது:—

"எமது போராட்டம் இனவாதப் போராட்டமாகவே முதலில் இருந்தது. பின்னர் இது தேசிய விடுதலைப் போராட்டமானது. நாளடைவில் இது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமாக நடை பெற்று வருகிறது.

திருகோணமலையில் இராணுவ தளத்தை அமெரிக்கா அமைத்தால், தென் ஆசியா முழுவதும் அமெரிக்க ஏகாதிபத்திய சுரண்டலுக்கு உட்பட்டு விடும்.

எங்கள் இயக்கம் கெரில்லா முறையில் போராட்டம் நடத்துவது இல்லை. நாங்கள் மக்கள் விடுதலைக்காகவே போராடுகிறோம். தமிழ் மக்களை படையினர் ஆயுதத்தால் தாக்கியதால் தான் நாம் ஆயுதம் தூக்கினோம். தமிழ் மக்களை அரசு நசுக்குவதை நிறுத்தட்டும் நாங்களும் ஆயுதங்களைக் கீழே போடுகிறோம்.

என்று ஆயுதத்தைத் தூக்கினோமோ அன்றே புரட்சி ஆரம்பமானது. என்று ஆயுதங்களை கீழே போடுகிறோமோ அன்று புரட்சி முடிவடையும்."

கடந்த 30 ஆண்டு காலமாக இலங்கை அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வியிலேயே முடிவுற்றன. சர்வதேசப் படைகள் எங்கும் அமைதியை ஏற்படுத்தியது இல்லை. இதே போல ஐ. நா. வும் பிரச்சினைகளை முழுமையாகத் தீர்த்தது கிடையாது.

பாரதமர் ராஜீவுக்கும் ஜனாதிபதிக்கும் நடை பெறும் பேச்சுவார்த்தையை நாங்கள் குழப்ப மாட்டோம். பேச்சுவார்த்தையில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. பேச்சுவார்த்தையில் நாங்கள் ஈடு [illegible] ந்து கொள்வது என்பது அல்ல. அடிப்படையில் பேச்சு வார்த்தை என்பது முதலில் தெரியப் படுத்தப்பட வேண்டும்.

எங்கள் போராட்டம் அரசுக்கு எதிரானதேயொழிய சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல. நாங்கள் மக்களை சந்திக்கச் செல்லும் போது அறிக்கையுடனும் புத்தகங்களுடனும் தான் செல்கிறோம். ஆயுதங்களுடன் செல்வது இல்லை. எமது விடுதலைப் போராட்டம் குறித்து இடதுசாரி நாடுகளுடனும், ஐ. நா அங்கீகாரம் பெற்ற விடுதலை இயக்கங்களுடனும் தொடர்ந்து தொடர்பு கொண்டு வருகிறோம்."

வீரகேசரி

(13 - 6 – 1985)

**அனைத்து அடக்கு முறைகளையும் உடைத்தெறிவோம்**

People's Liberation Organization of Thamil Eelam, 46 Central Road, Worcester Park, Surrey KT4 8HY, U.K.

படிப்பகம்